O.S No.77/2011
திருமதி.பேச்சியம்மாள் (P.W-1)
27.08.2021

குறுக்கு விசாரணை :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை,

உங்களிடம் காட்டப்படும் பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கில் உள்ள விபரங்கள் அனைத்தும் யார் உங்களுக்கு எடுத்து கூறினார்கள் என்றால் யாரும் அவ்வாறு கூறவில்லைஎனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு பங்கு தராததால் நானே முன் வந்து வழக்கை தாக்கல் செய்தேன், போலி ஆவணங்கள் ஏதோ தயார் செய்துள்ளார்கள் என்று பின்னர்தான் தெரியவந்தது. அந்த போலி ஆவணங்கள் என்று குறிப்பிட்டவை குறித்த விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஏனென்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. உங்களுக்கு போலி ஆவணங்கள் தயாரித்தது பற்றி யார் சொன்னார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் அது குறித்த விபரம் தெரியும் யாரும் எனக்கு கூறவில்லை. தாவா சொத்து அனைத்தும் உங்களுடைய கொள்ளுதாத்தா தவசிவலையனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், அந்த சொத்துக்கள் எனது அப்பாரு மூலமாக எனக்கு பாத்தியம். உங்கள் கொள்ளுதாத்தா தவசிவலையனுக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள் ஆகும், அவர்களுடைய பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது, நான் சிறுவயதாக இருக்கும்போது அவர்கள் இறந்தவிட்டார்கள். உங்கள் அப்பா மாரவலையனுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 4 பேர் ஆகும். அவர்களின் பெயர் பெரியகருப்பன், சின்னகருப்பன், மாரப்பன், அவிநாசியப்பன் ஆவார்கள். மொசுவன் என்ற கருப்பன் என்ற ஒருவர் இருந்தார் என்றால் சரிதான்,அவர் 5 வது மகன். மேற்படி நபர்களை தவிர 3 அத்தைகள் உங்களுக்கு இருக்கிறார்களா என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் வள்ளியம்மாள், நாச்சம்மாள், பழனியம்மாள் ஆகும். நீங்கள் தாக்கல் பிராதில் உள்ள கைரேகை உங்களுடையதான் அது என்னுடையதான் என்று சரியாக சொல்ல முடியாது. அந்த பிராதில் என்ன சொத்து விபரம் சொல்லியுள்ளார்கள் என்று உங்களுக்கு தெரியுமா

என்றால் தெரியாது. தாவா சொத்தில் யார் யார் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்று கூறமுடியுமா என்றால் நான், என்னுடைய சித்தப்பா மகன் கோவிந்தசாமி சுவாதீனத்தில் இருக்கிறோம். 1989 ம் வருடம் உங்கள் சித்தப்பா மகனுக்கும் உங்களுடைய சகோதர்கள் முத்துசாமி, சுப்பிரமணியம், அவிநாசிவலையன், கருப்பத்தாள், நாச்சி, மாரத்தாள் ஆகியோர் பதிவு செய்யத பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் சரிதான். அதில் உங்களுடைய உடன்பிறந்த சகோதரர்களான முத்துசாமி, சுப்பிரமணியம் ஆகியோர்களுக்கு தனியாக சொத்து ஒதுக்கப்பட்டு அதை அனுபவித்த விபரம் 1989 ம் வருடம் தெரியுமா என்றால் தெரியும். அந்த பாகபிரிவினை பத்திரத்தை நீதிமன்ற சாட்சியத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். இந்த பிராதில் பாகபிரிவினை பத்திரம் செல்லாது என்று நீங்கள் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். உங்களுடைய பிராதில் அனைத்து வாரிசுகளையும் சேர்த்தீர்களா என்றால் சேர்க்கவில்லை. நீங்கள் தாவா சொத்தை பொறுத்து 06-08-1996 ம் தேதியில் உங்கள் சகோதரர் சுப்பிரமணியத்திற்கு எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் குறித்து நீக்ஙள் வழக்கின் பிராதில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் அவ்வாறு எழுதிகொடுக்கவில்லை,எனது தம்பி ஏதோ வங்கியில் என்னை அழைத்து சென்றதால் எழுத படிக்க தெரியாத காரணத்தினால் எனக்கு காட்டப்பட்ட ஆவணத்தின் நான் கைரேகை இட்டேன். பிராதில் ஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நீங்கள் கூறி எழுதப்பட்டதா அல்லது உங்களது வழக்கறிஞரே தயார் செய்தாரா என்றால் நான் எந்த விபரமும் கூறவில்லை. அதை பற்றி எனக்கு தெரியாது. உங்கள் தம்பி உங்களை ஏமாற்றி விட்டார் என்று போலிசாரிடம் வழக்கு பதிவு ஏதேனும் செய்துள்ளிர்களா என்றால் எதுவும் செய்யவில்லை. 1996 ம் வருடம் நீங்கள் எழுதி கொடுத்த பத்திரம் செல்லாது என்று உங்கள் தம்பி மீது உரிமையியல் வழக்கு எதுவும் பதிவு செய்தீர்களா என்றால் செய்யவில்லை, அதற்காகதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் நீங்கள் சுவாதீனத்தில் இருக்கிறீர்கள் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நாங்கள் வீட்டு வரி செலுத்தி வருகிறோம் அந்த ஆவணத்தை என் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். அவ்வாறு நீங்கள் வரி எதுவும் செலுத்தவில்லை என்றும் அதற்காக ஆவணங்களை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் வரி செலுத்தி வருகிறேன்

என்னுடைய ஆவணங்களை வழக்கறிஞரிடம் ஒப்படைத்து விட்டேன். இந்த வழக்கில் உங்கள் அப்பார் தவசிவலையன் வாரிசுகள் அனைவரையும் வாரிசுகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அவர்களை வாரிசுகளாக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் இந்த வழக்கில் சேர்த்துள்ள தரப்பினர்கள் அனைவருக்கும் எவ்வளவு பங்கு பாத்தியம் என்று உங்களால் கூறமுடியுமா என்றால் கூறமுடியாது, பத்திரத்தில்தான் உள்ளது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d....M.Afzal Fathima,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.